# சிலப்பதிகாரத்தில் வணிக வளமை

5

**திருமதி பெ.வாசுகி**
**முழுநேர முனைவர் பட்டஆய்வாளர்**
**சமணவியல் துறை, சென்னை பல்கலைக்கழகம்**
**சேப்பாக்கம், சென்னை-600005**
pvsuki@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய தமிழ்நாடு கடல் சூழ்ந்த தீபகற்பமாக இருந்ததால், கடல் வாணிகம் சிறந்து விளங்கியது. சோழர்களின் துறைமுக நகரமான புகார் (காவிரிப்பூம்பட்டினம்), பன்னாட்டு வணிக மையமாகத் திகழ்ந்தது. இங்கு மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் என இரு பிரிவுகள் இருந்தன. உள்நாட்டு வணிகர் சாத்தர் என்றும், கடல் கடந்த வணிகர் நாய்கர் என்றும் அழைக்கப்பட்டனர். மாநாய்கன், மாசாத்துவான் போன்றோர் இக்குழுக்களின் தலைவர்களாக விளங்கினர். நாளங்காடி, அல்லங்காடி என பகலிலும் இரவிலும் வாணிபம் நடைபெற்றது. பாண்டியரின் தலைநகரான மதுரையில் நவரத்தினங்கள், பொன், துணிகள் மற்றும் தானியங்கள் (கூல வீதி) விற்பனை செய்ய தனித்தனி வீதிகள் இருந்தன. முத்து, பொன், தந்தம், அரிசி, மிளகு போன்ற வாசனைப் பொருட்கள் கிரேக்கம், உரோமாபுரி போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. யவனர்கள் பொன்னைக் கொடுத்து 'கறி' எனப்படும் மிளகைப் பெற்றுச் சென்றனர். பாரசீகம், அரபு நாடுகளிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. கி.மு. 5-ஆம் நூற்றாண்டிலேயே பாண்டியர்கள் சாவகத்தைக் கைப்பற்றியதால் கிராம்பு வணிகம் தமிழர் வசம் வந்தது. மாலுமிகளுக்கு வழிகாட்ட கலங்கரை விளக்கங்கள் இருந்தன. வணிகர்களின் நேர்மையையும், பண்டமாற்று மற்றும் நாணய முறைகளையும் இலக்கியங்கள் விவரிக்கின்றன. ஒரு அரசின் வலிமை அதன் பொருளாதாரத்தைப் பொறுத்தே அமையும் என்பதைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது.

**முக்கியச் சொற்கள்:** நாளங்காடி, யவனர்கள், வீதிகள், மிளகு, பஞ்சவாசம், சொற்கள்

**முன்னுரை**

பண்டைய தமிழகம் மூன்று புறமும் கடலால் சூழப்பட்டிருந்ததால், கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கியது. தமிழக அரசுகள் அக்காலத்தில் மாபெரும் கடல் வல்லரசுகளாகத் திகழ்ந்தன. கடல் வணிகத்தைப் பாதுகாப்பதற்காகத் தமிழக அரசுகள் தங்களுக்குள் ஒரு ஐக்கியக் கூட்டணியை அமைத்திருந்தன. சேர மன்னர்கள் கடற்கொள்ளையர்களை அடக்கினர்; சோழ, பாண்டிய அரசர்கள் தென்பரதவர்களை அடக்கினர் என்று சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. நிலந்தரு திருவிற்பாண்டியன், தன்

கடற்படை கொண்டு “சாவகம்” (இந்தோனேசியா தீவுகள்) கைப்பற்றியதால் கிராம்பு வணிகம் தமிழர்களின் கட்டுப்பாட்டில் வந்தது. திராவிடக் கப்பல்கள் மூலம் முத்து, பொன், தந்தம், அரிசி, மிளகு, வாசனைப் பொருட்கள் மற்றும் மயில்தோகை போன்றவை பாபிலோன், எகிப்து, கிரேக்கம் மற்றும் உரோமாபுரி போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இதனால் கிரேக்க மொழியில், பலபொருள்களின் தமிழ்ப்பெயர்கள் இடம்பெற்றன. யவனர்கள் பொன்னைக் கொடுத்து, 'கறி' என்ற மிளகைப் பெற்றுச் சென்றனர். அகநானூறுப் பாடல் காண்க.

"யவனர் தந்த வினைமா ணன் கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"

மேலும், மலாய்த்தீவு, சீனா போன்றவற்றுடனும் வணிகம் செய்தனர். இலங்கையிலிருந்தும் பெருமளவில் பொருட்கள் வந்தன. தமிழகத்தில் மஸ்லின், பட்டு மற்றும் பாம்புச் சட்டை போன்ற மிக மெல்லிய பருத்தித் துணிகள் வேலைப்பாடுகளுடன் தயாரிக்கப்பட்டதாகச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. புகார், மதுரை மற்றும் வஞ்சி போன்றவை முக்கிய வணிக மையங்களாகத் திகழ்ந்தன. சோழர்களின் துறைமுக நகரமான காவிரிப்பூம்பட்டினம் கி.மு. 500-களில் கடலுக்குள் 5 கி.மீ வரை பரவி இருந்துள்ளது. ஏறக்குறைய 750 ஆண்டுகள் உலகளாவிய அளவில் இவ்வணிகம் தொடர்ந்து நடைபெற்றது. காவிரிப்பூம்பட்டினம் பற்றிய பாடல்,

“பல் ஆயமொடு பதிபழகி, வேறு வேறு உயர்ந்த முதுவாய் ஒக்கல்
சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு
மொழி பல பெருகிய பழிதீர் தேயத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்” -பட்டினப்பாலை, 213-218

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கேற்பத் தமிழர்கள் பொருள் ஈட்டப் பிற நாடுகளுக்குப் பயணித்ததைச் சங்க இலக்கியங்கள் 'பொருள்வயிற்பிரிவு' எனக் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்கள் வணிகர்களின் செல்வச் செழிப்பான வாழ்க்கையை விவரிக்கின்றன.

**சிலப்பதிகாரத்தில் வணிகம்**

வணிகர்கள் காப்பியங்களில் முக்கியப் பாத்திரங்களாகச் சித்தரிக்கப் படுகிறார்கள். அதிலும் சிலப்பதிகாரம் வணிக குடும்பங்கள் சார்ந்த கதை. கண்ணகியின் தந்தை மாநாய்கன் மாபெரும் வணிகர்.

"..புகழ்மன்னும் புகார் நகர் அதுதன்னில்
மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள்..". - சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்து-1.22-24

கோவலன் தந்தை மாசாத்துவான் பற்றி கூறுகையில், இளங்கோவடிகள்,

"ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்துவானென்பான்
இருநிதிக் கிழவன்" - என்றுரைக்கிறார். –சிலப்பதிகாரம், 1.32-34

பழங்காலத்தில், உள்நாட்டு வணிகரைச் சாத்தர் என்றும், சாத்து என்று வணிக குழுவையும் கூறினார். கடல் கடந்து, வெளிநாட்டு வாணிகம் செய்தவரை நாய்கர் என்றும் குறிப்பிட்டனர். நாவாய்களில் (மரக்கலம்) வாணிகம் செய்தவன் நாவிகன்; நாய்கன் என்று மருவிற்று. இக்குழுக்களின் தலைவர்களாக மாசாத்துவான், மாநாய்கன் விளங்கினார். மாநாய்கர் போன்ற பெரும் வணிகர்களுக்கு 'எட்டி' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. அப்பட்டம் பெற்றவன் சாயலன் என்னும் வணிகன்.

'எட்டி சாயலன் இருந்தோன் தனது
பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையில்' -அடைக்கலக் காதை, 163-164

மணிமேகலையும், எட்டிப் பட்டம் பெற்ற வாணிகனைக் குறிப்பிடுகிறது (நாலாம் காதை, வரி 58, 64 & 22: 111-114).

அரசரும் விரும்பும் செல்வத்தை உடைய வணிகர் மிகுதியாக உள்ள பயன்மிக்க புகார் நகரம், அரிய பொருள்களைத் தரும் புதிய நாடுகள் ஒருங்கே திரண்டு வந்தது போன்ற தோற்றத்தைத் தந்தது. கடல்வழியிலும், தரைவழியாகவும் பல நாடுகளிலிருந்து ஈட்டிய பெரும் பண்டங்கள் நகரமெங்கும் குவிந்து இருந்தன.

"அரும் பொருள் தரூஉம் விருந்தின் தேஎம்
ஒருங்கு தொக்கன்ன உடைப்பெரும் பண்டம்
கலத்தினும் காலினும் தருவன ரீட்ட.." - மனையறம் படுத்த காதை - 5-7

"குலத்தில் குன்றாக கொழுங்குடிச் செல்வர்
அத்தகு திருவின் அருந்தவம் முடித்தோர்
உத்தர குருவின் ஒப்பத் தோன்ற' - மனையறம் படுத்த காதை - 8-10

அவ்வணிகர்கள், தங்கள் குல ஒழுக்கத்தில் சிறிதும் குன்றா இயல்பினராய், அறவழியில் சேர்த்த பொருளை, உத்தமதானம் செய்து உத்தரகுரு என்னும் போகபூமி இன்பம் பெறுபவரை ஒத்து இருந்தனர்; என அவர்கள் நற்குணத்தையும் குறிப்பிடுகிறார்.

திருக்குறள் ஆசான்,

"வணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்

பிறவும் தமபோற் செயின்." - திருக்குறள் – 120

விலைப்பொருளையும் கொள்பொருளாக மதித்தால் வணிகருக்கு நல்ல வாணிகம் நடைபெறும்; எனப் புகார் நகர வணிகர்கள் இருந்துள்ளனர்.

'நெடுநுகத்துப் பகல்போல நடுவுநின்ற நல்நெஞ்சினோர்',

'கொள்வதூம் மிகைகொளா கொடுப்பதூம் குறைகொடாது' - போன்ற வரிகள் வணிகர்களின் நேர்மையான அணுகுமுறையைக் காட்டுகினறன.

அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில்,

"குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னோடு
குணதிசை மருங்கிற் காரகில் துறந்து
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்

தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக" - சிலப்பதிகாரம், 4.35-38

மேலை, கீழை நாடுகள், வடக்கே இமயமலை, தெற்கே பொதியமலை ஆகிய நாற்புறமிருந்தும் வரப்பட்ட நறுமணப் பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

புகார் நகரில் பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என்ற இரு ஊர்கள் மூலம் கடல் வாணிகம் செய்துள்ளனர்.

"கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்

பயன்அறவு அறியா யவனர் இருக்கையும்,
கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்

கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்.' - சிலப்பதிகாரம், 5.9-12

காவிரி ஆறு கடலில் கலக்கும் பகுதியான மருவூர்ப்பாக்க நகரத்தில், தொழில் வல்லுநர்கள் மற்றும் பயன் கெடுதல் அறியா யவனர் இருப்பிடங்கள் இருந்தன. மரக்கலங்களில் வரும் செல்வத்திற்காக புலம் பெயர்ந்த அயல் நாட்டவர், தமிழ் மக்களுடன் கலந்து உறைகின்ற கடற்கரை குடியிருப்புகள் பல இருந்தன. இப்பாடல், பூம்புகார் துறைமுகம் பல நாடுகளும் வந்து வாணிபம் செய்த பன்னாட்டு மையமாகத் திகழ்ந்துள்ளதற்கான சான்று பகர்கின்றது.

"வண்ணமும் சுண்ணமும் ...

..பகர்வனர் திரிதரு நகர வீதியும், - சிலப்பதிகாரம், 5.13-15

நறுமணகுழம்பு, சுண்ணம், சந்தனம், மலர், அகில் போன்ற புகைப் பொருட்களைத் தெருக்களில் திரிந்து, கூவி விற்கும் வீதிகள் அந்நகரில் இருந்தன. புகார் கடைவீதிகளில்

கடைகளும் இருந்தன, கூவித் திரிந்து விற்றவரும் இருந்தனர். சிலப்பதிகார காலத்தில் (பொ. ஊ. 2-ம் நூற்றாண்டு), ஒரு பொருளை, மக்கள் கூடும் பெருந்தெருவில் கூவி அறிவித்து விற்கும் பழக்கம் இருந்ததற்கான மற்றுமொரு சான்றாக அரங்கேற்று காதையில் மாதவியின் தாய் சித்ராபதி, கூனியிடம் மாதவி பரிசு பெற்ற மாலையைக் கொடுத்து வாலிபர் திரியும் தெருவில் நிறுத்தி, ‘ஆயிரத்து எட்டு கழஞ்சு வீறு பெற்றுயர்ந்த கிளிச்சிறை என்னும் இப்பொன் மாலையை வாங்குவோர் கொடி `போன்ற மாதவிக்கு மணாளனாவார்’; எனக்கூறி விற்றாள்.

"நூற்றுப்பத்தடுக்கி எட்டுக்கடை நிறுத்த..

...மாமலர் நெடுங்கண் மாதவி மாலை" - சிலப்பதிகாரம், 3. 164-170

மருவூர்ப்பாக்கக் கடைவீதிகள்;

“பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்...பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்,... மறுவின்றி விளங்கும் மருவூர்ப்பாக்கமும்,” - சிலப்பதிகாரம், 5.16-39

பட்டுநூல், எலிமயிர், பருத்திநூல், ஆகியவற்றால் கைத்தொழில் செய்யும் காருகர் வாழிடங்கள், பவளம், சந்தனம், அகில், மாசறு முத்து, மணிகள், பொன், போன்றவை அளவற்று குவிந்துள்ள வீதிகள், பற்பல பொருள்கள், தானியங்கள் தனித்தனியாக குவித்து விற்கும் கூல வீதிகள், பிட்டு (காழியர்), அப்பம் (கூவியர்), விற்பவர், கள் விற்கும் வலைச்சியர், மீன் விற்கும் பரதவர், வெள்உப்பு விற்கும் உமணர், வெற்றிலை, பஞ்சவாசம் விற்பவர், இறைச்சி விற்பவர், எண்ணெய் வணிகர் (ஓசுநர்), என ஒருவருக்கு ஒருவர் உதவும் வகையில், அனைவரும் நெருங்கி வாழும் ஊன் மலிந்த பகுதிகள் பல மருவூர்பாக்கத்தில் இருந்தன. தவிரவும், வெண்கலம் (கஞ்சக்காரர்), செப்புப் பாத்திரம் செய்யும் கன்னாரும், தச்சர், கொல்லர், ஓவியர், மண்பொம்மை செய்வோர், தட்டார், தையல்காரர், செம்மார், பலவித உருக்கள் செய்யும் கைவினைஞர்கள், பாணர், எனப் பல இனத்தவரும் அடுத்தடுத்த வீதிகள் அமைத்து அங்கு வாழ்ந்தனர்.

"பாசவர் வாசவர் பல்நிண விலைஞர்" என்பவர் முறையே, வெற்றிலை, நறுமணப் பொருட்கள், இறைச்சி விற்போர். வாசவர், பஞ்சவாசம் (தக்கோலம், இலவங்கம், கற்பூரம், சாதிக்காய், பளிதம்) போன்ற வாசனைப் பொருட்களை விற்பவர். சாவக நாட்டிலிருந்து கிடைத்த வாசப் பொருள்களைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

**பட்டினப்பாக்கம் சிறப்பு:**

"பீடிகைத் தெருவும் பெருங்குடி வணிகர்
மாட மறுகும். ." - 5. 41-42

கடைத்தெருக்களும், வணிகரின் மாளிகைகளும் பட்டினப்பாக்கத்தில் இருந்தன.

"திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொடு
அணிவளை போழுநர் அகன் வீதியும்," - 5.46-47

முத்துக் கோப்பவரும், கொள்கையுடன் அணியும் சங்கு வளையல் செய்பவரும் வாழும் அகண்ட வீதிகளும், 'பயில்தொழிற் குயிலுவர்' - தோல்கருவி, துளைக்கருவி ஆகிய தொழில் பயின்ற குயிலுவக் கருவியாளரும் வாழும் இடங்களுடன் மற்றவர் வாழும் இடங்களும் இருந்தன.

"..இருபாற்பகுதியின் இடைநிலம் ஆகிய
கடை கால் யாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங்காடியில்.." -5.60-63

"நாண்மகிழிருக்கை **நாளங்காடியில்"** **- 5.196**

மருவூர்பாக்கம், பட்டினப்பாக்கம் என்னும் இரு ஊர்களுக்கும் இடையே இருந்த சோலையில், மரங்களையே தூண்களாகக் கொண்டு அமைந்த, நாளங்காடி எனப்பட்ட பகல் நேரக் கடைகள் இருந்தன. அங்கு விற்பவர், வாங்குவோர் குரலோசை தொடர்ந்து ஒலித்தது. அங்கிருந்த காவல் பூதக்கோயிலின் பலிபீடத்தில், சித்திரா பௌர்ணமி அன்று, மறவர், படையலிட்டு வழிபட்டனர்.

“வம்ப மாக்கள் தம்பெயர் பொரித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக்
கடைமுக வாயிலும் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலும் ஓரீஇய வாகி..” - 5.111-114

பண்டகசாலை என்பது பொருட்களைப் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கும் கிடங்கு. இங்கு வெளிநாட்டினர் தங்கள் பெயரும் எண்ணும் பொறித்த முத்திரையிடப்பட்ட மூட்டைகளை வைத்திருந்தனர். கடைகளில் இருந்த சரக்குகள் போக, பண்டகசாலையுள் பூட்டியது நீங்கலாக, பண்டகசாலைக்கு வெளியேயும் மூட்டைகள் குவிந்து கிடந்தன. நாளங்காடி பூதம் தண்டிக்கும் என அவற்றைக் களவாடவும் எவரும் அச்சம் கொண்டு ஒழுகினர்.

காவிரிப்பூம்பட்டினத்தின் பண்டகசாலை மற்றும் வணிக முறைகள் குறித்து பட்டினப்பாலை பின்வருமாறு விவரிக்கிறது.

கடல் வழியாகப் பல பொருட்கள் இறக்குமதியும் ஏற்றுமதியும் செய்யப்பட்டன. ஏற்றுமதிக்கான மூட்டைகளில் சோழ மன்னனின் புலி முத்திரை இடப்பட்டிருந்தது; அந்த முத்திரை உள்ள பொருட்கள் மட்டுமே வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டன. சுங்கம் வசூலிப்பவர்கள் பண்டகசாலையில் உள்ள பொருட்களைப் பாதுகாப்பதில் இரவும் பகலும் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டனர். புகார் நகரின் பெரிய வணிகர்கள் மாடி வீடுகளில் வசித்தனர். சில்லறை வணிகம் நடைபெறும் கடைத்தெருக்கள் 'ஆவணம்' அல்லது 'அங்காடி' என்று அழைக்கப்பட்டன.

**இந்திரா விழாவின்** முடிவில் கடல் விளையாட்டைக் காணச் சென்ற கோவலனும் மாதவியும் 'வைகறை யாமம், வெள்ளி விளக்கம் நள்ளிருள் கடியும்' நேரத்தில் புறப்பட்டனர்.

"வான வண்ணகையன் அத்திரி ஏற" - கடலாடு காதை, 6.119

கோவலன் அரசவாகனமாகிய அத்திரியில் ஏறிச் சென்றான். பாரசீகம் மற்றும் அரேபிய நாடுகளிலிருந்து கப்பல்களில் குதிரைகளும், 'அத்திரி' எனப்படும் கோவேறு கழுதைகளும் கொண்டு வரப்பட்டன. அத்திரி என்பது ஒரு வகை சாதிக் குதிரை. அக்காலத்துச் செல்வந்தர்கள் இவற்றை ஊர்தியாகப் பயன்படுத்தினர். 'இராசவாகனம்' என்பது இதன் சிறப்புப் பெயர். கொற்கை பரதவர் பகுதிக்கு அத்திரி பூட்டின வண்டியில் ஒருவன் சென்றான் என்று சேந்தன் கண்ணனார் கூறுகிறார் (அகநானூறு, 350; 6-7).

"கொடு நுகம் நுழைந்த கணைக்கால் அத்திரி வடிமணி நெடுந்தேர் பூண"

நக்கீரரின் அகநானூற்று (அகம், 120: 10-11), உலோச்சனாரின் நற்றிணை (278: 7-9) பாடல்களும், பரிபாடலும் (10-ம் பாடல், 17-ம் அடி), சிலர் அத்திரியூர்ந்து சென்றதைக் குறிப்பிடுகிறது.

கோவலனும் மாதவியும் இரவின் கடைசியாமம், வைகறையில் கண்ட கடைத்தெருக்கள்;

"கோடிபல அடுக்கிய கொழுநிதிக் குப்பை …பீடிகைத் தெருவின்
மலரணி விளக்கத்து மணி விளக்கெடுத்தாங்கு..

"கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்…
கூலமறுகில்..மாலைச் சேரி மருங்குசென்று

எய்தி..
இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்....

மொழி பெயர் தேத்தோர் ஒழியா விளக்கம்..." - 6.121-145

பல கோடி மதிப்புள்ள பொருட்கள் குவிந்துள்ள மாடங்களைக் கொண்ட ஆவண வீதிகளிலும், பெரிய கடைவீதிகளிலும், மலரணி விளக்குடன் மாணிக்க விளக்குகள் ஏற்றி, மங்கல மகளிர் மலர் மற்றும் நெல் தூவி வழிபாடு செய்யும் செல்வச் செழிப்பு

காணப்பட்டது. பின், மரக்கலங்கள் கொண்டு வந்த கடல் செல்வத்தால் உயர்ந்த நகரமான மருவூர்ப்பாக்க வீதியினூடே சென்று, கடற்கரை மணலில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைப் பரப்பி, அவற்றின் பெயர்களைத் துணிக்கொடிகள் மூலம் அடையாளப்படுத்தி, புலம் பெயர்ந்த வணிகர்கள் கூவி விற்கும் கூல வீதிகளைக் கடந்தனர்.

வண்ணக் கலவைகள், சந்தனம், மலர், ஆபரணங்கள் மற்றும் உணவுப் பண்டங்களை விற்போர், அணிகலன் செய்யும் கம்மியர், பிட்டு வாணிகர் ஆகியோர் வைத்த விளக்குகள், அப்பம் சுடும் வணிகர் குடத்தண்டிலிட்ட கரிய அகல் விளக்குகள், மகளிர் கடை, மீன்விலை பகர்வோர், வேற்றுநாட்டவர் விடிவிளக்குகள், பரதவர் மீன்திமிலில் வைத்தவை, பண்டசாலை காப்போர் இட்டவை, என எண்ணற்ற விளக்குகள் ஒளிவீசிய கடைவீதிகளைக் கண்டனர். மாலுமிகளுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமும் பிறநாட்டு வணிகர்கள் காவிரிப்பூம்பட்டினதில் தங்கியிருந்ததையும் சிலம்பு கூறுகிறது.

கோவலன் தான் சம்பாதித்த பணத்தை இழந்த பொழுது, அவனது தந்தையும், கண்ணகியின் தந்தையும் பெரும் பணக்காரர்களாகவே உள்ளனர். எனினும் சிலம்பை விற்று, சொந்தமாக வணிகம் செய்து, புதுவாழ்வு தொடங்க கண்ணகியும் கோவலனும் மதுரை செல்கின்றனர். வணிகமகன் கோவலன், "பொருள் வேட்கையேயான்" என்று கவுந்தியடிகளிடம் கூறுவது, வணிகமே அவனது பயணத்திற்கான காரணம் என்பதை உணர்த்துகிறது.

கோவலன் மதுரைக்குச் சென்றபோது, பாண்டியன் கோட்டை வாயிலை யவன வீரர்கள் விழிப்புடன் காவல் காத்து கொண்டிருந்தனர். கோவலன் மறைவான வழியில் நகருள் புகுந்தான்.

"சுருங்கை வீதி மருங்கில் போகிக்
கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு' சிலம்பு, ஊர்காண். 65-67

சுருங்கை என்பது கிரேக்க மொழிச் சொல். பிறர் அறியாதபடி மறைந்து அமைந்த வீதி, சுரங்கம் என்று பொருள். 'சுருங்கை நெடுவழி' (பரிபால். 20:104). யவன வாணிகத் தொடர்பின் காரணமாக, சில தமிழ் சொற்கள், கிரேக்க நாட்டில் புகுந்தது போல், கிரேக்க மொழிச் சொற்களான மத்திகை (குதிரை ஓட்டும் சம்மட்டி), சுருங்கை, கலம், கன்னல் முதலானவை தமிழில் கலந்துவிட்டன. சங்கப் பாடல்களில் இச்சொற்களைக் காணலாம்.

கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு
தெக்கண மலயச் செழுஞ்சே றாடிப
பொற்கொடி மூதூர்.." சிலம்பு, ஊர்காண்.-14. 80-83

கொற்கைத் துறையில் உற்பத்தியான முத்துவடம் பூண்டு, தென்திசை பொதிகை மலை சந்தனக் குழம்பை உடல் முழுதும் பூசி, அழகிய மூதூர் மதுரைக்கு நீராட மகளிரும் ஆடவரும் செல்வதைக் கோவலன் கண்டான். தொல்லியல் துறையினரின் அகழ்வாராய்ச்சி இடங்களில் முதன்மையானது கொற்கைத் துறைமுகம்.

வங்க ஈட்டத்துத் தொண்டியோ ரிட்ட
அகிலுந் துகிலும் ஆரமும் வாசமும்
தொகுகருப் பூரமுஞ் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல் 107-110

கோவலன் மதுரை நகர் செல்லும் போது, அங்கு நாளங்காடி, அல்லங்காடி என்ற முறையில் வாணிகம் நடைபெறுவதைக் கண்டுள்ளான். ஊர்காண் காதையில், மதுரை மாநகரில் கண்ட அங்காடித் தெருக்களைக் இளங்கோவடிகள் குறிப்பிடுவது காண்க.

"எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்" - 14.167

சிறுதனம், பெருந்தனம் பெறுபவாராகிய அறுபத்து நான்கு கலையுமுணர்ந்த **அரங்கக் கூத்தியர்** வாழும் **இரு பெருவீதிகளையும்**,

"வையமும் பாண்டிலும் மணித் தேர்க் கொடுஞ்சியும்...
..அரைசுவிழை திருவின் அங்காடி வீதியும்" – 14. 168-179

வண்டி, தேர், ஆகியவற்றின் உதிரி பாகங்கள், வெண்கலம், செம்பு கருவிகள், தோல் பொருள்கள், சாமரை, முகப்படம், கயிற்றால் பின்னியவை, வாள், தந்தத்தால் ஆனவை, நறுமணப் புகைப் பொருட்கள், சாயம் பூசும் சாந்து, பூமாலைகள் எனப் பல்வேறு பொருட்களும் கிட்டும், அரசனும் விரும்பும் செல்வத்தையுடைய **அங்காடி வீதியும்**,

"காகபாதமும் களங்கமும் விந்துவும்..
..வகைதெரி மாக்கள் தொகைபெற்றோங்கிப்
பகைதெறல் அறியாப் பயங்கெழு வீதியும்" - 14.199-200

மரகத மணிகள், நால்வகை மாணிக்கங்கள், புஷ்பராகமணிகள், நீலமணிகள், நால்வகை குற்றமற்ற, நால்வகை நிறமுடைய, ஒளிமிக்க வயிரமணி வகைகள், குற்றம் நீங்கிய கோமேதகம், திரட்சியுடைய முத்துக்களும், துளையற்ற, வளையாத, பவளங்களும், என ஒன்பது வகை மணிகளின் சிறப்புறிந்த, பகையறியா மக்கள் கூட்டம் வாழும்

பயன்மிக்க **இரத்தினக்கடை வீதியும்**,

"சாதரூபம் கிளிச்சிறை ஆடகம்
சாம்பூநதம் என...
இலங்குகொடிஎடுக்கும் நலம்கிளிர் வீதியும்" -14. 201-204

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என நால்வகை பொன்னின் வேறுபாடு ஆராயக்கூடிய பொன் வணிகர், கொடிகட்டி அறிவிக்கும் **பொற்கடைவீதியும்**,

"நூலினும் மயிரினும் நுழைநூல் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூறு அடுக்கத்து
நறுமடி செறிந்த **அறுவை வீதியும்**," -14.205-207

பருத்தி, பட்டு நூல்களாலும், எலிமயிராலும் இழைத் தெரியாமல் நுட்பமாக நெய்யப்பட்டு, பல நூறு அடுக்குகளாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள மணம் கமழும் புடவைகள் விற்கும் **துணிக் கடைத் தெருவும்**,

"கூழாங்குவித்த கூலவீதியும்" – 14. 212

அளக்கும் கருவிகள் உடைய தரகர் திரியும், உரிய காலம் இல்லாவிடினும் மிளகு மூட்டைகளுடன், பல தானியங்கள் குவித்து வைக்கப்பட்ட **கூலவீதியும்**, நால்வேறு தெருக்களும், கோயிற் கடைத்தெருவும், குறுக்குத் தெருக்களும், கோவலன் கண்டு மகிழ்ந்தான்.

**முடிவுரை:** வணிகத்தின் பல நிலைகளைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. ஒரு அரசின் வலிமை வணிகப் பொருளாதாரத்தைக்கொண்டு அமைகின்றது. ஏற்றுமதியும் இறக்குமதியும் பண்டைத் தமிழகத்தில் இடைவிடாது நடந்து வந்துள்ளன. இவ்வாய்வு வரையறைக்குட்பட்டதேயன்றி முழுமையானது அல்ல. மகாகவி பாரதியின் வரிகள் நெஞ்சில், உதட்டில் மலர்கின்றது.

"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம், காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்..."

**துணைநூற்பட்டியல்**

1. பேரா. ஜெ.ஸ்ரீசந்திரன், சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும், சென்னை-17, தமிழ் நிலையம், 2013
2. முனைவர் எம்.எஸ். ஸ்ரீலக்ஷ்மி, ஐம்பெரும் காப்பியங்களில் தமிழர் வாழ்வியல், சென்னை – 600001, உமா பதிப்பகம், 2016
3. https://www.tamilvu.org/ta/library-l3100-html-l3100ind-132364
4. https://zenodo.org/records/16524242 - சிலப்பதிகாரம் காப்பியம் காட்டும்

வாணிகம், முனைவர் சா. சதீஸ்குமார்

5. https://www.keetru.com/index.php/2018-01-12
6. https://tamizhkalam.com/thamilarkalin-kadal-vanikam/
7. https://ta.wikisource.org/wiki/பழங்காலத் தமிழர், ஆசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி, 3. போக்குவரதுத் சாதனங்கள், 4. தமிழ் நாட்டு வாணிகர்